**கம்பளை நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பளை நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.
இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பளை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான

உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் சபைக்குச் சொந்தமான 07 சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 4,392,462 தொகை மூலதன மாக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | பொதுச் சந்தை இறைச்சிக் கடைக்காக பேரேட்டின் அடிப்படையில் ரூபா. 3,132,240 தொகை நிலுவையாகக் காணப்படும் அதேவேளை அது ரூபா. 1,592,944 என ரூபா. 1,539,296 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | இறைச்சிக் கடை விலைமனுத் தொகையில் 25 வீத வைப்புத் தொகை குறைத்துக் காட்டப்பட்டதன் காரணமாக இவ் வேறுபாடு ஏற்பட்டுள்ளதென்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சீர் செய்யப்படல் வேண்டும். |

**1.6.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புல்வேறு காரணங்களுக்காக சபையினால் தொடுக்கப்பட்ட 11 வழக்குகள் மீளாய்வாண்டின் இறுதியாகும் பொழுது விசாரிக்கப்பட்டுக்கொண்டிருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் 04 வழக்குகள் தொடர்பான தகவல்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தன. | இதை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சீர் செய்யப்படல் வேண்டும். |

**1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத்தொகை ரூபா. 48,016,464 ஆகவிருந்த 03 கணக்கு விடயங்களுடன் தொடர்பான மீதிகளுக்கும் பயன்பாட்டு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கும் இடையில் ரூபா. 3,384,428 இற்கான வேறுபாடு காணப்பட்டது. | நாட் குறிப்பின் மூலம் இணக்கமடையச் செய்வேன் | எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சீர் செய்யப்படல் வேண்டும். |

**1.7. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 | 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை 28 தரப்பினர்கள் மூலம் பல்வேறு வருமானங்கள் தொடர்பில் பெறப்பட்ட ரூபா. 563,753 தொகைக்கான காசோலைகள் மதிப்பிழந்த போதும் அது தொடர்பாக 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 571(2) | 2 வருடங்களைக் கடந்த ரூபா. 1,005,827 பெறுமதியான 35 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | முன்னைய வைப்புகளை வருமானத்திற்கு வரவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 60,198,035 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 58,787,580 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் ஈட்டலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் வரி | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 50,185,347 ஆகக் காணப்பட்ட நிலுவை மீதியில் வருடத்தினுள் ரூபா 7,883,058 மாத்திரம் சேகரிக்கப் பட்டிருந்ததுடன் இது மொத்த நிலுவையில் 16 வீதமாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் ரூபா 31,659,572 ஆகிய பட்டியல்படுத்தலில் ரூபா. 15,561,714 ஆகிய மொத்த பட்டியல்படுத்தலில் 49 வீதம் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று மொத்த வீதவரி நிலுவை ரூபா. 50,400,143 ஆகக் காணப்பட்டது. | தரகுப் பணம் செலுத்தல் அடிப்படையில் கொத்துக்களை தடை செய்யும் உதவியாளர்களை கேள்வி கோரல் மூலம் இணைத்துக் கொண்டு 2021 ஜுன் மாதம் முதல் நிலுவை வீத வரியினை அறவீடு செய்வதற்காக ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி 14 அரச நிறுவனங்களிடமிருந்து 1 தொடக்கம் 11 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கான வீதவரி ரூபா. 2,701,423 ஆகிய தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரியினை அறவீடு செய்வதற்காக குறித்த 14 நிறுவனங்களுக்கும் விரிவான அறிக்கைகளுடன் கூடிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளன. | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | கம்பளை தடகள மற்றும் கிரிக்கட் விளையாட்டுக் கழகத்திடமிருந்து 2020 திசெம்பர் 31ஆம் திகதியன்று 21 மாதங்களுக்கான நிலுவை வாடகையாக ரூபா. 84,000 தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | நிலுவைகளை செலுத்துவதை புறக்கணித்து வருவதுடன் உடைமையினை மீளப் பெறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 2,735,517 ஆகிய நிலுவை வரியில் ரூபா. 883,993 தொகை பத்தாண்டு காலத்திற்காக பட்டியலிடப்பட்டிருந்த ரூபா 2,031,354 ஆகிய வரித் தொகையில் ரூபா 1,201,804 ஆகிய தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 829,550 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | இத் தொகையை அறவீடுவதற்காக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நிலுவையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | நகர சபைக்குச் சொந்தமான விடுதியினை வாடகைக்கு விடும் பொழுது 2019 ஜுலை மாதம் தொடக்கம் 2020 திசெம்பர் 31ஆம் திகதி வரை ரூபா. 2,201,020 ஆகிய தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | இத் தொகையினைச் செலுத்துவதற்கு காலத்தினைப் பெற்றுத் தருமாறு வேண்டப்பட்டிருந்ததுடன், அம் மேலதிக காலமும் முடிவடைந்து உள்ளமையினால் நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) **கடை வாடகை**

------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | பொதுச் சந்தைக் கடைகளின் மூலம் ரூபா. 3,052,609 ஆகிய தொகையும், வழக்கறிஞர் காரியாலயக் கட்டடத் தொகுதியின் மூலம் ரூபா. 299,163 ஆகிய தொகையும் கம்பளை புகையிரதப் பாதைக்கு மேலால் அமைந்துள்ள வியாபாரக் கட்டடத் தொகுதியின் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவை கடை வாடகை ரூபா. 11,075,578 அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | நிலுவைப் அறவீடு செய்வதற்காக எழுத்துமூலம் அறிவத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலங்கை போக்குவரத்து சபை பேரூந்து தரிப்பிட கடைத் தொகுதியின் மூலம் ரூபா. 9,633,050 ஆகிய தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன், 2020 திசெம்பர் 31ஆம் திகதியன்று சபைக்குச் சொந்தமான 07 கடைத் தொகுதிகளுடன் தொடர்பான ரூபா. 2,807,321 ஆகிய வாடகைத் தொகை சபைக்கு அறவிட வேண்டியிருந்தது. | நிலுவைப் அறவீடு செய்வதற்காக எழுத்துமூலம் அறிவத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) வேறு வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | நகர சபை எல்லையினுள் அமைந்துள்ள 12 விளம்பரப் பலகைகளின் மூலம் ரூபா. 531,450 ஆகிய தொகையும் அதிஷ்ட இலாபச் சீட்டு அறை வரி வருமானம் ரூபா. 46,000 ஆகிய தொகையும் தொலைபேசி பரிமாற்றல் கோபுரங்களின் மூலம் ரூபா. 266,223 ஆகிய தொகையையும் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2020 திசெம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 6,052,850 ஆகக் காணப்பட்ட முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டண நிலுவையில் முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளுடன் தொடர்பான ரூபா. 3,961,202 ஆகிய தொகை காணப்படுவதுடன் அந்த வருமானத்தினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | முச்சக்கர வண்டி தொடர்பான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வின் பின்னர் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

| | | |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் மாகாணசபை பிரதான செயளாலர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 316,007 ஆகவும் முத்திரை கட்டணம் ரூபா 19,751,000 ஆகவும் காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன். | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அன்றாடம் சேகரிக்கப்படுகின்ற சுமார் 20 டொன் அளவிலான கழிவுகளை முகாமை செய்வதற்கான முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படாததன் காரணமாக 2019 ஜுலை மாதம் தொடக்கம் உக்கலடையக்கூடிய கழிவுகளை தம்புள்ளை கழிவுச் செயற்திட்டத்திற்காக எடுத்துச் செல்வதற்கான எரிபொருள் செலவாக ரூபா. 2,056,215 ஆகிய தொகையும் கழிவுகளுக்காக ரூபா. 2,076,000 ஆகிய தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | கம்பளை நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அன்றாடம் சேகரிக்கப்படுகின்ற சுமார் 10 தொன் அளவிலான உக்கலடையக்கூடிய கழிவுகளை தம்புள்ளை மாநகர சபையின் தீகம்பதன கழிவு தொட்டிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. கழிவுகளை அகற்றுவதற்கான ஒரு இடம் இல்லாததன் காரணமாக தொடர்ச்சியாக இச் செலவினை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். | திண்மக் கழிவு முகாமைக்கான முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரிவு V இன் பிரகாரம் செயற்படாது பொதுச் சந்தை கட்டணத்தை ஒரே தடவையில் அறவீடு செய்தல் தொடர்பான விசேட குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 25 வீதத்தினை செலுத்தி மீதித் தொகையினை 48 சம தவணைகளில் செலுத்துவதற்கு அவகாசம் வழங்கப்பட்டதன் காரணமாக 2020 திசெம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 68,571,043 ஆகிய நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | 48 தவணைகளில் அறவீடு செய்வதற்கான குழுப் பரிந்துரையானது ஆளுனரின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் ஒரே தடவையில் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் கடைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரிவு (V) இன் பிரகாரம் செயற்படாது பொதுச் சந்தையின் 152 ஆம் இலக்க கடை விலைமனுத் தொகையின் 25 வீதம் தவிர்ந்த மீதமுள்ள தொகையினை 5 வருடங்களில் | இது தொடர்பில் அடுத்த நடவடிக்கைகளை எடுப்பதற்காக வருமானப் பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துவதற்கு நகர சபை செயலாளரின் 2016 ஏப்ரல் 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஒப்பந்தக்காரருக்கு அனுமதி வழங்கப்பட்டதன் மூலம் கடையினை வாடகைக்கு விட்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதும் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய தொகை ரூபா. 6,000,750 இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 4,512,918 ஆகவிருந்ததுடன் இதில் ஒரு வருடத்தை தாண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 4,278,418 ஆகவிருந்தது. | பேற வேண்டிய மீதிகள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 16,089,534 ஆகவிருந்ததுடன் இதில் ஒரு வருடத்தை தாண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 5,287,932 ஆகவிருந்தது | வியாபாரக் கடன் கொடுத்தோருக்கான நிதி எமது நிறுவனத்திற்கு கிடைக்காததன் காரணமாக அத் தொகையினை செலுத்த முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | தாமதமின்றி நிலுவை பணத்தை சேகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுச் சந்தையினை நிர்மாணிப்பதற்காக ரூபா. 2,002,742,936 ஆகிய தொகை செலவிடப்பட்டிருந்த போதும், விலைமனு ஊடாக வாடகைக்கு விடப்பட்டிருந்த 100 இற்கும் அதிகமான பொதுச் சந்தைக் கடைகளில் வியாபார நடவடிக்கைகள் இடம்பெறாது மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன், மூடி வைக்கப்பட்டிருந்த கடைகள் பல்வேறு நாசகார செயல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. 53 கடைகளை வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கை எடுக்காது மூடி வைக்கப்பட்டிருந்தன. | பயணத் தடை முடிவடைந்ததன் பின்னர் பட்டியலிட்டு அத் தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். மீதமுள்ள கடைகளுக்கான விலைமனுக் கோருவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | ச்பைக்குச் சொந்தமான சொத்துக்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தி எதிர்பார்த்த பலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பளை நீதிமன்ற வளாகத்திற்கான நுழைவாயிலை அமைப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள நகர சபைக்குச் சொந்தமான 4 உத்தியோகபூர்வ விடுதிகள் அமையப்பெற்றுள்ள 30.44 பேர்ச் பரப்புள்ள காணி 2019 திசெம்பர் 06 ஆம் திகதி உடபலாத்த பிரதேச செயலாளருக்கு உரிமை கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2018 ஏப்ரல் 05 ஆம் திகதிய KD/LE/1550 இலக்க மதிப்பீட்டுக் கடிதத்தின் அடிப்படையில் அக் காணி ரூபா. 32,000,000 ஆகிய தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், அத் தொகையானது 2021 ஜனவரி 15ஆம் திகதி வரை கிடைக்கப் பெற்றிருக்க வில்லை. | 2021 பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெற்ற பிரதேச இணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | சபைக்கு கிடைக்க வேண்டிய தொகையினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான காணிகள் அமைச்சரின் அனுமதியின்றி 03 சந்தர்ப்பங்களில் வாடகைக்கு விடப்பட்டிருந்தன. | விடயப் பொறுப்பு அமைச்சரின் அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். | 1988 நகர சபை கட்டளைச் சட்டத்தின் 36 (உ) II பிரிவின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 114 காணிகளின் மூலமான வரி வருமானம் சபைக்குக் கிடைக்காத அதேவேளை, அக் காணிகளுக்கான வரி ஒப்பந்தங்கள் காலதுவரையாக்கம் செய்யப்பட்ட கோவைகள் காணப்படாததுடன், சபைக்குச் சொந்தமான அக் காணிகளை இனங்கண்டு மதிப்பீது செய்து வரி வருமானத்தினைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது ஆய்வொன்றின் மூலம் சபைக்குச் சொந்தமான காணிகள் இனங் காணப்பட்டுள்ளதுடன் அளவை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை முறையாக இனங்கண்டு வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கான முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 05 வருடங்களுக்கு ஒரு முறை கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும், இக் கடைத் தொகுதியின் கடைகள் 2008ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டு அதனடிப்படையில் வாடகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும். | கடைகளை 05 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை போக்குவரத்து சபை பேரூந்து தரிப்பிடத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதியின் 42 கடைகளுக்கான ஒப்பந்தக் காரர்கள் தமக்கு தேவையான வகையில் பெறுமதிகளைத் தீர்மானத்து | தொடர்ச்சியாக கணக்காய்வு விசாரணைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட போதும் அதனை சீர் செய்துகொள்வதற்கு முடியாது போயுள்ளது. | முறையான திட்டத்தின் அடிப்படையில் கடைகளை வாடகைக்கு விடுவதற்கும் வாடகைத் |

| | | | |
|---|---|---|---|
| | வரிகளைச் செலுத்தி வந்துள்ளனர். | தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏற்பட்டுள்ள தவறுகளை சீர் செய்துகொள்வேன். | தொகையினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள் பொறி மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 1,601,220 பெறுமதியான 7 வகையான சொத்துக்கள் பயன்பாடற்றுக் காணப்பட்டன. | வாகன ஏல விற்பனைக்கான மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளதுடன் 03 கழிவு அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் சீமெந்துக் கல் இயந்திரம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். | சொத்துக்களை செயற் திறனான முறையில் பயன்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 மாடிகளைக் கொண்ட பொது சந்தைக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு ரூபா. 2,000,000,000 செலவில் 02 மாடிகள் நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன், திட்டத்தின் பலவீனங்கள் காரணமாக அவ்விரண்டு மாடிகளும் குறை பயன்பாட்டினைக் கொண்டிருந்தது. இக் கட்டிடம் அமைக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்த போதும், மேல் மாடியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன், கொங்ரீட் பகுதிகளில் வெடிப்பு ஏற்பட்டு அவ்விடங்களால் மழை நீர் வழியும் நிலை காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டு அதி மேதகு சனாதிபதி அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைவாக செயற்படுத்தப்படும் கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக் கட்டடத்தை புனர் நிர்மாணம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள அதேவேளை அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் அவற்றை வினைத்திறனான வகையில் பயன்படுத்துவதற்கும் முடியுமான வகையில் திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்தல் வேண்டும். |